සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
**Sabaragamuwa Provincial Department of Education**

පළමු වාර පරීක්ෂණය - 2016 | 11 ශ්‍රේණිය
முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 11
**First Term Test - 2016** | **Grade 11**

පුරවැසි අධ්‍යාපනය I | *පැය 01*
*குடியியற்கல்வி* I | ஒரு மணித்தியாலம்
***Civics I*** | ***One hour***

பெயர்/சுட்டெண் :- ………………………………………………………………………………………

- **கவனிக்கவும்.**
- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக. இவ்வினாத்தாளுக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
- **இல. 1 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை அடைப்பக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

**1.** சனநாயகம் என்பதனூடாக பொருள் கொள்ளப்படுவது ……………………………………………………..
( சர்வாதிகார ஆட்சிமுறை / குழுவாட்சி முறை / மக்கள் ஆட்சி முறை)

**2.** ………………………………… ஒற்றையாட்சி முறை நிலவும் நாடாகும்.
( ஐக்கிய அமெரிக்கா / பெரிய பிரித்தானியா / கனடா )

**3.** 1978ம் ஆண்டு யாப்பின் 13ம் திருத்தச் சட்டத்திற்கு அமைய மாகாண சபைக்கு மாத்திரம் உரிய அதிகாரம் …………………………………………………………………………… என்ற பெயரால் குறிப்பிடப்படும்.
( இணைந்து நிறைவேற்றும் பட்டியல் / மத்திய அரசுக்குரிய பட்டியல் / மாகாண சபைக்குரிய பட்டியல்)

**4.** ஒரே நாட்டினுள் பல்வேறு இனங்களைச் சேர்ந்த, பல்வேறு மொழிகளைப் பேசுகின்ற, பல்வேறு மத நம்பிக்கையுடைய வெவ்வெறு பழக்கவழக்கம், மரபுகள் ஆகிய வேறுபாடுகள் காணக்கூடியதாக இருக்கும். இவ்வகையான சமூகம் ……………………………………………….……. என அடையாளப்படுத்தப்படும்.
( பன்மை பண்பாட்டு சமூகம் /பன்மைச் சமூகம் / பல்லினச் சமூகம் )

5. உற்பத்தி காரணிகளும் அவற்றின் அமையச் செலவுகளுக்கமைய முயற்சியாண்மைக்காக வழங்கப்படும் கொடுப்பனவு …………………………………….…. ஆகும்.
( சம்பளம் / வட்டி / இலாபம்)

**6.** அரசு ஒன்றின் உயர் சட்ட மூலமாக அமைவது ……………………………………………………… ஆகும்.
( சிவில் சட்டம் / அரசியல் யாப்பு / நீதிமன்ற தீர்ப்புகள் )

**7.** பிரதம நீதியரசர் மற்றும் 10 நீதிபதிகளுக்கு குறையாத ……………………….. பேருக்கு மேற்படாத நீதிபதிகளும் உயர் நீதிமன்றத்தில் செயற்படுவர்.
( 10 / 12 / 11 )

**8.** முஸ்லிம்களின் விவாகரத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் நீதிமன்றங்கள் ……………………………. ஆகும்.
( உயர் நீதிமன்றம் / காதி நீதிமன்றம் / நீதவான் நீதிமன்றம்)

**9.** முதன் முதலாக உள்நாட்டு நிர்வாகத்தில் இலங்கையர் பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய சீர்திருத்தம் ……………………………………………………………………… ஆகும்.
( 1931ம் ஆண்டு சீர்திருத்தம் / 1833 ம் ஆண்டு கோல்புறூக் சீர்திருத்தம் / 1910ம் ஆண்டு குறுமக்கலம் சீர்திருத்தம் )

10. இலங்கையிலுள்ள தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை ……………………………… ஆகும்.
( 22 / 25 / 24 )

❖ **இல. 11 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.**

11. ஐக்கிய அமெரிக்கா பல கட்சி முறை நிலவும் நாடாகும். ( )

12. மத்திய அரசிற்குள்ள நிர்வாக அதிகாரங்களுள் சிலவற்றினை பிராந்திய நிர்வாக அலகுகளிடம் கையளித்தலானது அதிகாரப் பன்முகப்படுத்துதல் எனப்படும். ( )

13. ஒரு கலாசாரத்தின் பிரதான அம்சமொன்றை பிறிதொரு கலாசாரத்தினர் பின்பற்றுவார்களாயின் அது கலாசார ஊடுருவல் எனப்படும். ( )

14. வெளிப்படையான மோதல் என்பது தனிநபர்களுக்கு இடையேயும் குடும்ப அங்கத்தவரிடையேயும் ஏற்படும் மோதல் நிலமையாகும். ( )

15. முதலாளித்துவ பொருளாதார முறையின் அடிப்படைப் பண்பு பொதுநலனைப் பேணுவதாகும். ( )

16. தேசவழமைச் சட்டம் வட மாகாணத்திலுள்ள தமிழர்களின் சம்பிரதாயங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ( )

17. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு முறைப்பாடுகளை விசாரணை செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு உரியதாகும். ( )

18. இலங்கையில் சட்டமா அதிபர் சர்வசன வாக்கெடுப்பினூடாக நியமிக்கப்படுகின்றார். ( )

19. இலங்கையின் இறுதியானதும் அதிஉயர் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரமுடையதுமான மேன்முறையீட்டு நீதிமன்றமே உச்ச நீதிமன்றமாகும். ( )

20. மனிதர்களின் தேவைகள் அதிகரிக்கும்போது பொருட்களின் கேள்வி குறையும். ( )

❖ **இல. 21 தொடக்கம் 30 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21. மன்னராட்சி முறைக்கு பதிலாக மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சி முறையை ஏற்படுத்திய புரட்சி …………………………………………………………….. ஆகும்.

22. சுவிட்சர்லாந்தில் செயற்படும் மாநில அரசுகள் ……………………………..………. என அழைக்கப்படும்.

23. மாகாணசபையின் நாம நிர்வாகி ………………………………………………………………… ஆவார்.

24. இலங்கை ………………………………………………………. சமூகத்தைக் கொண்ட நாடாகும்.

25. மனிதர்களால் எதிர்கொள்ள நேரிடும் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வது தொடர்பில் சமூக அமைப்புக்கள் ஒழுங்கமைந்துள்ள விதம் ……………………………………………. என அழைக்கப்படும்.

26. உற்பத்தியின்போது செலவு ஏற்படுவதும் அவற்றை நுகர்வு செய்யும்போது விலை செலுத்தவேண்டி இருப்பதுமான பொருட்கள் ……………………………………………….. என அழைக்கப்படும்.

27. வங்காள விரிகுடாவை சூழவுள்ள நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்பு அமையம் ……………………… என அழைக்கப்படும்.

**28.** இலங்கையில் மனித உரிமைகள் ஆணைக்குழு ……………………………………………. ஆம் இலக்க கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**29.** 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பின்படி அரசியல் யாப்புக்கு வியாக்கியானம் கூறும் அதிகாரம் ……………………………………………………………… உரியதாகும்.

**30.** 1978ம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பின் கீழ் நிறைவேற்று மற்றும் நிர்வாக நடவடிக்கைகளின்போது பொது மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகையில் அவற்றை பாதுகாப்பதற்காக அரசாங்கங்கள் ஏற்படுத்தியுள்ள பதவி …………………………………………..……………….. ஆகும்.

❖ **இல. 31 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

**31.** நேரடி ஆட்சிமுறையினை தற்காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவால் அல்லாதது

I.தற்கால அரசுகளில் நிலப்பரப்பு விசாலமானதாகக் காணப்படல்
II.தற்கால அரசுகள் சனத்தொகையை கொண்டிருத்தல்.
III.எல்லாப் பிரஜைகளையும் ஓரிடத்தில் ஒன்று திரட்டுவதில் உள்ள சிரமம்.
IV.அரசியல் கட்சி முறையின் வளர்ச்சி

(………)

**32.** தேசிய அரசின் தோற்றத்திற்கான காரணி அல்லாதது

I. பிரான்ஸிய புரட்சி
II.விஞ்ஞான மறுமலர்ச்சி
III.புரட்டஸ்தாந்து மத சீர்திருத்த இயக்கம்
IV.மானிய முறையின் வீழ்ச்சி

(………)

ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு 33 மற்றும் 34 வினாக்களுக்கு விடையளிக்குக.

A. பெயரளவிலான நிர்வாகம், உண்மை நிர்வாகம் என இரு பிரிவுகளைக் கொண்டிருக்கும்.
B. சட்டத்துறையிலிருந்து நிறைவேற்றுத்துறை உருவாக்கப்படுகின்றது.
C. நிறைவேற்றுத்துறையின் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துபவர் சனாதிபதி ஆவார்.
D. சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத்துறைக்கும் நேரடித் தொடர்பு காணப்படும்.
E. அரச தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் சனாதிபதியாவார்.
F. நிறைவேற்றுத்துறை தனது செயற்பாடுகள் தொடர்பாக சட்டத்துறைக்குப் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது.
G. சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறையை நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாது.
H. சட்டத்துறையால் நிறைவேற்றுத்துறையை பதவி விலக்க முடியும்.

**33.** ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகள் அடங்கிய எழுத்துக்களாவன (…………………….…….)

**34.** பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் அடங்கிய எழுத்துக்களாவன (…………………….…….)

**35.** மோதலை தீர்க்கும் வழிமுறைகளில் பின்பற்ற வேண்டிய முக்கியமான வழிமுறையாவது

I.மோதலுக்கு அடிப்படையான காரணங்களை களைவதற்கான நடவடிக்கை எடுத்தல்.
II.பிரச்சினையில் இருந்து விலகிச் செல்ல முற்படல்.
III.பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஊடாக மோதல் ஏற்படுவதை தவிர்த்தல்.
IV.கலந்துரையாடலுக்காக மூன்றாம் தரப்பொன்றை பங்கேற்கச் செய்தல்.

(………)

**36.** சட்டம் தொடர்பான பொருத்தமற்ற கூற்றாவது

I.ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தில் வாழும் தனிநபர்களின் வெளிநடத்தைகளைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

II.அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசு ஒன்றின் மூலம் விதிக்கப்படுதல்.

III.மனித நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விதிக்கப்படுதல்.

IV.சமூக நன்மையை நோக்காகக் கொண்டு விதிக்கப்படுதல்.

(………)

**37.** சட்டத்தின் ஆட்சி பற்றிய சரியான கூற்றாவது

I.அங்கீகரிக்கப்பட்ட சட்ட தொகுதிக்கிணங்க ஆட்சி செய்தல்.

II.சட்டத்தை மீறி சர்வாதிகார ரீதியில் ஆட்சி செய்தல்.

III.சட்டத்தை கவனத்தில் கொள்ளாது மக்களின் சுபநிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்தல்.

IV.சர்வதேச சட்டத்திற்கு அமைவாக உள்நாட்டு சட்டகத்தொகுதியைத் உருவாக்குதல்.

(………)

**38.** மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரமாவது

I.மனித உரிமைகள் தொடர்பான உபகுழுக்களை மாகாணசபை மட்டத்தில் தாபித்தல்.

II.மனித உரிமை மீறல்களை விசாரணை செய்தல் மற்றும் அது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிடுதலும்

III.மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு விருப்பமில்லாத நபர்களை நாட்டிலிருந்து வெளியேற்றல்.

IV.மனித உரிமைகள் தொடர்பாக பரிசீலனை செய்தல்.

(………)

**39.** ‘‘எல்லா வகையிலும் அரசியல் அதிகாரம் ஒரு மத்திய நிறுவனத்தினுள் குவிந்திருக்கும்’’ என்ற ஜே.பைனரின் வரைவிலக்கணத்தோடு தொடர்புடைய ஆட்சி

I.ஒற்றையாட்சி II.சமஸ்டியாட்சி

III.ஜனாதிபதித்துவ ஆட்சி முறை IV.மந்திரிசபை

(………)

**40.** கி.பி.1833ம் ஆண்டு சீர்திருத்தத்திற்கு அமைவாக சட்டவாக்க கழகத்தின் உத்தியோக சார்பு மற்றும் உத்தியோக சார்பற்ற உறுப்பினரின் எண்ணிக்கை

I. 10 II. 15 III. 20 IV. 25

(………)

( 40 x 1 = 40 புள்ளிகள் )

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
**Sabaragamuwa Provincial Department of Education**

| | |
|---|---|
| පළමු වාර පරීක්ෂණය - 2016 | 11 ශ්‍රේණිය |
| முதலாம் தவணைப் பரீட்சை 2016 | தரம் 11 |
| **First Term Test - 2016** | **Grade 11** |

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය **II** | පැය 02 |
| குடியியற்கல்வி **II** | இரண்டு மணித்தியாலம் |
| **Civics II** | **Two hours** |

பெயர்/சுட்டெண் :- ……………………………………………………………………………………

- பின்வரும் வினாக்களுள் முதலாம் வினா கட்டாயமானது.
- முதலாம் வினா உட்பட எவையேனும் நான்கு வினாக்களைத் தெரிவசெய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

**01.**

I. சட்டம் குறித்த ஜோன் ஒஸ்டினின் வரைவிலக்கணத்தைக் குறிப்பிடுக.
II. சட்டத்தின் பண்புகள் 2 தருக.
III. சட்டத்தின் மூலாதாரங்கள் 2 தருக.
IV. சட்டத்தின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
V. குற்றவியல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய பாரிய குற்றச் செயல்களாகக் கருதப்படும் குற்றங்கள் 2 தருக.
VI. இலங்கையில் நடைமுறையில் நிலவும் சட்டத்தொகுதிகள் இரண்டு தருக.
VII. நீதிமன்றத்தின் சுதந்திரத்தில் தாக்கம் செலுத்தும் காரணிகள் 2 தருக.
VIII. அரசாங்க முறைகளின் இரு வகைகளைக் குறிப்பிடுக.
IX. உள்ளூராட்சி நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
X. தென் மாகாணத்திற்கு உரிய மாவட்டங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

( 10 x 2 = 20 புள்ளிகள்)

**02.**

I. நீதித்துறையின் சுதந்திரம் என்றால் என்ன? ( 2 புள்ளிகள்)
II. நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக சனநாயக நாடுகள் பின்பற்றும் நடைமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
III. நீதித்துறையின் சுதந்திரம் நிலைநாட்டப்படும்போது பிரஜைகளுக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக. ( 5 புள்ளிகள்)

**03.**

I. சமஸ்டி ஆட்சி என்பதன் பொருள் யாது? ( 2 புள்ளிகள்)
II. சமஸ்டி ஆட்சி முறையை பின்பற்றும் நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)
III. இந்தியா சமஸ்டி பண்புகளை வெளிப்படுத்தும் ஒற்றையாட்சி நாடாகும். இக்கூற்றை சுருக்கமாக விளக்குக.( 5 புள்ளிகள்)

04.

I. பன்மைப் பணபாட்டு சமூகம் என்பதனை வரைவிலக்கணப்படுத்துக. ( 2 புள்ளிகள்)

II. பன்மைப் பண்பாட்டு சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டிற்கு பிரஜையொருவர் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. பன்மைப் பண்பாட்டு சமூகமொன்று உருவாக்குவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை உதாரணங்களுடன் விளக்குக. ( 5 புள்ளிகள்)

05.

I. அதிகாரத்தைப் பன்முகப்படுத்தல் என்ற எண்ணக்கருவை விளக்குக. ( 2 புள்ளிகள்)

II. இலங்கையில் தற்போது நடைமுறையில் காணப்படும் மாகாண சபையின் கட்டமைப்பினை வரிப்படத்தின் மூலம் காட்டுக. ( 3 புள்ளிகள்)

III. இலங்கையில் மாகாணசபைமுறையை நடைமுறைப்படுத்துகையில் உருவாகியுள்ள பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக. ( 5 புள்ளிகள்)

06.

I. நிலையான அபிவிருத்தி என்றால் என்ன? ( 2 புள்ளிகள்)

II. நிலையான அபிவிருத்தியின்போது கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் 3 தருக. ( 3 புள்ளிகள்)

III. நிலையான அபிவிருத்தியின் முக்கியத்துவத்தினை விளக்குக. ( 5 புள்ளிகள்)

07.

I. உலக மயமாதல் என்றால் என்ன? ( 2 புள்ளிகள்)

II. உலக மயமாதல் காரணமாக உலக பொருளாதாரத்தில் காணக்கூடிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. உலக மயமாதல் காரணமாக இலங்கையில் ஏற்படும் தாக்கங்கள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றை இழிவளவாக்குவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு விளக்குக. ( 5 புள்ளிகள்)

08.

I. மோதல் என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.? ( 2 புள்ளிகள்)

II. மோதலை சமாதான முறையில் தீர்த்துக் கொள்ளும் வழிமுறைகள் மூன்றைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

III. மோதலை சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்வதனூடாக கிடைக்கும் நன்மைகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்குக. ( 5 புள்ளிகள்)